**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 150/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ரபீக்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ஜவஹர்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், V and AC, Dindigul.** |
| **Village** | : | | **Religion** | : | **முஸ்லீம்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **11.11.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**2–ம் எதிரி ஆஜர். 3, 4 –ம் எதிரிகள் ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. ரபீக்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016ம் ஆண்டு திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 18.06.2016ம் தேதி காலை 03.00 மணியளவில் நானும், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. சதாநந்தம், முதல் நிலை காவலர் திரு. பிரபாகரன் ஆகியோர்களுடன் குற்ற தடுப்பு நடவடிக்கைக்காக கண்காணித்துக் கொண்டு, திண்டுக்கல், குடைப்பாறைப்பட்டிக்கு, வடக்கே உள்ள முருகன் கோவில் அடிவாரத்தின் அருகே வந்தபோது, அங்கு நின்று

பேசிக் கொண்டு இருந்த, பின்னர் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த 1. குமரேசன், 2. ராஜா என்ற கப்ப ராஜா, 3. சக்திவேல், 4. மணி என்ற அப்பாச்சி, 5. அருள் குணசேவியர் ஆகியோர் போலீஸ் பார்ட்டியைக் கண்டதும் ஓட முயற்சித்தவர்களை சுற்றி வளைத்துப் பிடிக்க முயற்சித்தபோது, குமரேசன், ராஜா என்ற கப்ப ராஜா ஆகியோர்களைத் தவிர மற்றவர்கள் ஓடி தலைமறைவாகினர். அவர்களை விசாரிக்க முன்னுக்கு பின்னாக பெயர், விலாசத்தை மாறி மாறி கூறியதால் சந்தேகத்தின் பேரில் இருவரையும் 03.30 மணிக்கு கைது செய்து, 04.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து, எதிரிகள் மீது நிலையக் குற்ற எண். 463/2016, 41 (2) கு.வி.மு.ச. ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின் எதிரிகள் இருவரையும் விசாரிக்க 1–வது எதிரி குமரேசன் என்பவர் தானாக முன் வந்து எந்த வித அச்சுறுத்துதலும், துன்புறுத்துதலும் இல்லாமல் சாட்சிகள் மாயாண்டி, உதயக்குமார் ஆகியோர் முன்னிலையில் 04.30 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதியான " எங்களை அழைத்துச் சென்றால் நாங்கள் குடைப்பாறைப்பட்டிக்கு வடக்கு பக்கம் உள்ள முருகன் கோவில் அருகே உள்ள முட்புதரில் கொள்ளையடிக்க மறைத்து வைத்திருக்கும் பொருட்களை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறோம்" என்ற பகுதி மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் இவ்வழக்கின் பிரிவுகளை 41 (2) கு.வி.மு.ச. வில் இருந்து 399, 402 இ.த.சவின் கீழ் பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. இத்துடன் எனது

விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>2-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

பொதுவாக காவல்நிலையத்தில் இருந்து வெளி வேலைக்கு சென்றால் பொது நாட்குறிப்பேட்டில் அதைக் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் பதிவு விபரம் பற்றி எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். முறைக்காவல் பணிக்காக முதல் தகவல் அறிக்கை காலம் – 5 ல் குறிப்பிடப்பட்டுள்ள Beat No. 2 யார் என்ற விபரம் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், தற்போது ஞாபகம் இல்லை. அவரை இந்த வழக்கின் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ சாட்சிகளான காவலர்கள் அனைவரும் நான் பணிபுரிந்த காவல் நிலையத்தில் என் கீழ் பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான். முருகன் கோவிலுக்கு கீழ் காளியம்மன், பகவதியம்மன் கோவில் உள்ள என்றாலும், அந்த கோவிலுக்கு பக்கத்தில் ஒரு கருப்பணசாமி கோவில் உள்ளது என்றாலும், தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலையத்தில் இருந்து சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படும் இடமானது சுமார் 1 கி.மீ. தூரம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் ரோந்து சென்றதாக சொல்லப்படும் இடமானது, குடியிருப்புக்கள் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கின் புகார்தாரர் மற்றும் வழக்கு பதிவு செய்தது இரண்டுமே நான் தான் என்றால் சரிதான். மாயாண்டி மற்றும் உதயக்குமார் ஆகியோர் பல்வேறு வழக்குகளில் காவல் துறை சார்பில், பல்வேறு நீதிமன்றங்களில் சாட்சிகளாக உள்ளார்கள் என்றால் சரியல்ல. 2-ம் எதிரியிமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் நான் பெறவில்லை. வழக்கு சொத்துக்களை கைப்பற்றப்படாத நிலையில் நான்

சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான். நான் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளின் பெயர், விலாசம் பின்னால் யாரைக் கேட்டு தெரிந்து கொண்டேன் என்று என் முதல் விசாரணையிலும், புகார் மனுவிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால், எதிரிகள் சொன்னதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று எந்தவித ரோந்து பணிக்கும் செல்லவில்லை என்றாலும், எந்த ஒரு குற்ற நிகழ்வும் நடைபெறவில்லை என்றாலும், எனது மேல் அதிகாரியின் வேண்டுகோளுக்கு இணங்க புள்ளி விபரக் கணக்கிற்காக, தவறாக தொடரப்பட்ட வழக்கில், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த ஒரு எதிரியும், எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியரல்ல. 2–ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>**3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**</u>

2–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் தம்முடையதாக ஏற்றுக் கொள்கின்றனர்.

**Taken down by me/before me in open court on 11.11.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2025.11.11 18:20:21 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**